# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


## முன்னிலை: ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்

## மேல் முறையீட்டு மனு எண். 90 / 2015

திரு. மு. பெருமாள்,
(மனைவி திருமதி. ராஜலட்சுமிக்காக)
த/பெ முனுசாமி,
எண்.17, கணபதி நகர்,
சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர் – 603 209.
காஞ்சிபுரம் மாவட்டம் . . . .மேல்முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
130 ஜி.எஸ்.டி ரோடு (புதிய பேரூந்து நிலையம் எதிரில்),
செங்கல்பட்டு 603 001. . . . . . . எதிர்மனுதாரர்

## ஆணை நாள் : 8–3–2016

1. திரு. மு. பெருமாள், த/பெ முனுசாமி, கணபதி நகர், சட்டமங்கலம் கிராமம், அவர்களின் 27.10.2015 நாளிட்ட மனு, மேல்முறையீட்டு மனு எண்.90 /2015 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேற்கண்ட மனுவில் மேல்முறையீட்டாளர் அனுப்பிய மனுவிற்கு பதில் அளித்திடாத பொறியாளர்கள் அனைவர் மீதும் மற்றும் உதவி கணக்கு அலுவலர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட வேண்டியும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிமுறைகளில் உள்ளபடி உரிய இழப்பீடும் கிடைத்திட வேண்டும். கூடுதலாக பெறப்பட்ட தொகையினையும்

இழப்பீடு தொகைகள் அனைத்தினையும் காலதாமதம் இன்றி மின் இணைப்பு எண். 566–044–1162–ன் கணக்கில் முன்வரவாக பதிவு செய்யப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட முறையீட்டின் நகல் மேற்பார்வை பொறியாளர், செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லையெனில் பதிலுரையை சமர்ப்பிக்கும்படி 2.11.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர், செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 14.12.2015 நாளிட்ட பதிலுரையை சமர்ப்பித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 2.2.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6. மேல்முறையீட்டாளர் திரு. மு. பெருமாள் அவர்கள் கேட்புரையில் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7. எதிர்மனுதாரர் சார்பில் திருமதி. A.S. மாலதிஸ்ரீ , செயற்பொறியாளர், மறைமலை நகர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

8. எதிர்மனுதாரர் அவர்கள் தன்னுடைய 1.3.2016 நாளிட்ட கடிதத்தில் திருமதி. பெ. இராஜலட்சுமி அவர்கள் மின்இணைப்பு எண்.566–044–1162–இல் அவர்களின் மேல்முறையீட்டு மனு தொடர்பாக மனுவிலுள்ள குறைகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் மனுவினை திரும்ப பெறுவதாக சமரச கடிதம் செயற்பொறியாளர்/இ&ப–மறைமலை நகர் அவர்கள் மூலம் அளித்துள்ளார் என்று தெரிவித்து மேல்முறையீட்டாளரின் கடிதத்தின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

9. தன்னுடைய மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளதால், திரு.மு.பெருமாள் அவர்கள் தன்னுடைய மனைவி திருமதி. பெ. ராஜலட்சுமிக்காக சமர்ப்பித்துள்ள 5.2.2016 நாளிட்ட

செயற்பொறியாளர் மறைமறை நகர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கடித்திலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"நான் மேற்கண்ட என்னுடைய மி.இ.எண்.**566/044/1162** வீதப்பட்டி மாற்றம் தொடர்பாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் புகார் அளித்திருந்தேன். இந்த மனு கடந்த **2.2.2016** அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரணை நடைபெற்றது. இதனிடையே இந்த வீதப்பட்டி மாற்றம் தொடர்பாக எனக்கு அதிகப்படியான வசூலித்த தொகையானது என்னுடைய மின்இணைப்பு எண்ணில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த இரண்டு மின்கட்டண தொகையானது எனக்கு முழுமையாக அட்ஜெஸ்ட் செய்து தரப்பட்டுள்ளது. மேலும், இந்த வீதப்பட்டி மாற்றம் மற்றும் அதிகப்படியான தொகை அட்ஜெஸ்ட் செய்ததது எனக்கு தங்களால் மற்றும் உதவி பொறியாளர் மறைமறை நகர்–II பிரிவு அவர்களால் முழுவதுமாக விளக்கப்பட்டது.*

*எனவே, இதன் தொடர்பாக மறைமலை நகர் II பிரிவு பொறியாளர் மற்றும் உதவி கணக்கு அலுவலர் மறைமலைநகர் ஆகியோர் மீது நான் கூறியுள்ள புகாரை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்றும் இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது வேறு எந்த மேல்நடவடிக்கையும் தொடர வேண்டாம் என்றும் மனுவை முழுமையாக வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்று தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்."*

10. மேற்கண்ட கடிதத்தினை கூர்ந்து படிக்கும்பொது நாம் அறிவது, வீதப்பட்டி மாற்றம் தொடர்பாக அவரிடமிருந்து அதிகமாக வசூலிக்கப்பட்ட தொகையானது அவருடைய மின் இணைப்பு எண்ணின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, கடந்த இரண்டு மின்கட்டண தொகை அவருக்கு முழுமையாக சரிசெய்து தரப்பட்டுள்ளது என்றும், அதுபற்றி உதவி பொறியாளர்/மறைமலை நகர் II பிரிவு அலுவலகம் அவர்களாலும் செயற்பொறியாளர்/ மறைமலை நகர் அவர்களாலும் அவருக்கு விளக்கப்பட்டது என்றும் அதன் காரணமாக அவர் மறைமலை நகர் II பிரிவு பொறியாளர் மற்றும் உதவி கணக்கு அலுவலர் ஆகியோர் மீது அவர் கூறியுள்ள புகாரை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்றும் அவருடைய மேல்முறையீட்டு மனு மீது வேறு எந்த மேல் நடவடிக்கையும் தொடர வேண்டாம் என்றும் மனுவை முழுமையாக வாபஸ் பெற்றுக் கொள்கிறார் என்றும் அறிய முடிகிறது.

11. மேல்முறையீட்டாளர், அவரின் மேல்முறையீட்டு மனுவின் மீது எந்த மேல் நடவடிக்கையும் தொடர வேண்டாம் என்று தெரிவித்து மனுவை திரும்ப பெறுகிறேன் என்று தெரிவித்துள்ளதால், மேல்முறையீட்டு மனு எண்.90/2015, தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. மு. பெருமாள்,
(மனைவி திருமதி. ராஜலட்சுமிக்காக)
த/பெ முனுசாமி,
எண்.17, கணபதி நகர்,
சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர் – 603 209, காஞ்சிபுரம் மாவட்டம்

2) மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
130, ஜி.எஸ்.டி ரோடு புதிய பேரூந்து நிலையம் எதிரில்,
செங்கல்பட்டு 603 001.

3. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.